DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 276/2024 |
| Deposition of Witness for | : | P.W.10 |
| Name | : | **அருள்மணி** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் எதிரி ஆஜர். )**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 18.11.25

**முதல் விசாரணை:**

நான் தற்போது செல்லப்பனேந்தலில் குடியிருந்து வருகிறேன். நான் தேங்காய் உரிக்கும் வேலை பார்த்து வருகிறேன். கிருஷ்ணன் மகன் அ.சா.7 கோபுரம் என்பவரை தெரியும். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் உள்ள கையொப்பம் என்னுடையதல்ல. வழக்கு சம்மந்தமாக வேறு எந்த விபரமும் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசுதரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அனுமதிக்கும்படி அனுமதி வேண்டப்பட்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது.)**

**அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை :**

போலிசார் இவ்வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள் என்றும் விசாரணையின் போது கடந்த 24.06.2024 ம் தேதியன்று காலை 6.45 மணியளவில் நானும் அ.சா.7 கோபுரம் என்பவரும் திருப்புவனம் காவல்நிலையம் முன்பு சென்றுகொண்டிருந்தபோது திருப்புவனம் காவல்நிலைய ஆய்வாளர் எங்களை கண்ணன் என்பவரை கைது செய்து வைத்திருப்பதாக சொல்லி அந்த வழக்கிற்கு சாட்சியாக இருக்கும்படி எங்களிடம் கேட்டதாகவும் அதற்காக நாங்கள் எதிரி கண்ணன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திற்கு சாட்சியாக இருந்தோம் என்று போலிசார் விசாரணையில்சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றும் என் முன்னிலையில் சம்பவத்தன்று காலை 7.15 மணியளவில் எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை காவல் ஆய்வாளர் பதிவு செய்ததாகவும் அதில் எதிரி இவ்வழக்கின் குற்ற சம்பவம் பற்றி சொன்னதோடு தன்னை அழைத்துச் சென்றால் சம்பவயிடத்தையும் சம்பவத்திற்கு பயன்படுத்திய வழக்கு சொத்தையும் அடையாளம் காண்பிக்கிறேன் என அவரது ஒப்புதல் வாக்குமூலத்தில் சொன்னதாக போலிசார் விசாரணையின்போது சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக வழக்கிற்கு விரோதமாக உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**: இல்லை

**மறு விசாரணை**: இல்லை

N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Date: 2025.11.18 11:07:59 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர் ,**

**சிவகங்கை.**